முதன்மை மாவட்ட நீதிமன்றம், தஞ்சாவூர்

OS 280/2022

பிரதிவாதி தரப்பு 2 வது சாட்சி கணேசன் என்பவரின் வாக்குமூலம் Bharatiya Sakshya Adhiniyam, 2023 சட்டத்தின் படி திருமதி.G.ரேவதி, கிரேடு -1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கணேஷ் | வயது | : | 45 |
| தந்தை பெயர் | : | ராதாகிருஷ்ணன் | தாலுக்கா | : | கும்பகோணம் |
| கிராமம் | : | கும்பகோணம் | தொழில் | : | ஆடிட்டர் |

நாள் : 29-01-2025

பி.வா..சா.2

முதல் விசாரணை

1) நான் தற்போது இந்நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

2) இந்த வழக்கில் வாதி , பிரதிவாதிகளை தெரியும். வாதி, பிரதிவாதிகளின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள், தொழில்கள் சம்பந்தப்பட்ட வருமான வரி கட்டுவது சம்பந்தமாக எனக்கு அவர்களை தெரியும்.

3) எனது மூலமாகதான் வாதி மற்றும் பிரதிவாதிகள் வருமான வரி கட்டி வருகிறார்கள்.

4) 2019ல் இருந்து நான் வருமான வரி சம்பந்தமாக பார்த்து வருகிறேன். 1996ல் இருந்து எனது சீனியர் ராதாகிருஷ்ணன் தான் கணக்கு வழக்குகளை பார்த்து வந்தார்.

5) 2022ல் இருந்து வருமான வரி கட்டியது சம்பந்தமான ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். அந்த வருமான வரி கணக்குகள் சா.சா.ஆ.1

6) கட்டிடங்களில் இருந்து வரும் வருமானம் மற்றும் கட்டிடங்களின் கடன் தொகையை திரும்ப செலுத்துதல் குறித்தும் வருமான வரி கட்டப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரங்கள் சா.சா.ஆ.1 ல் உள்ளது.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1) நான் C.A. படித்துள்ளேன்.

2) வாடகை சம்பந்தமான ரசீதுகள் பார்த்துள்ளேன். ஆனால் அது சம்பந்தமான வவுச்சர்களை பார்க்கவில்லை.

3) வீட்டு வருமானம் என்று நான் சொல்வது கடைகள் சம்பந்தமான வருமானத்தையும் சேர்த்துதான் நான் சொல்கிறேன்.

4) வங்கி கணக்குகளை பார்த்து யாருடைய கணக்கில் இருந்து மேற்படி வாடகை வருமானம் வந்தது என்பதை நான் சா.சா.ஆ.1ல் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

5) கமிசன் மற்றும் இதர வருமானம் என்று நான் போட்டு இருப்பது தரப்பினர்கள் என்னிடம் சொல்வதை வைத்து அந்த வருமானத்தை குறிப்பிட்டுள்ளேன். ஆனால் அந்த வருமானத்திற்கு ஆவணங்கள் பார்க்கவில்லை.

6) மேற்படி வீட்டு கடன் தொடர்பான விபரங்கள் அசல் கடன் மற்றும் வட்டி வீதம் ஆகிய விபரங்களை அசோகன் என்னிடம் தெரிவித்தார். அதன் அடிப்படையில் அந்த விபரங்கள் என்னால் பூர்த்தி செய்யப்பட்டது.

7) ரூ.1,20,000/-த்திற்கு செலவான விபரங்கள் என்ன என்பதற்கு ஆவணங்கள் பார்க்கவில்லை.

8) சா.சா.ஆ.1 க்கான நகல் அசோகன் வசம் உள்ளது.

9) வாடகைக்கு இருப்பவர்கள் ஜி.எஸ்.டி தொகையை வாடகைதாரர்களே செலுத்தி விடுகிறார்கள். அதற்கான சான்று எதுவும் அசோகன் என்னிடம் தரவில்லை.

10) சா.சா.ஆ.1 ஆவணம் பிரதிவாதிகள் வாய்மொழியாக கொடுக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில்

தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

11) வரி சலுகைகளை பெறுவதற்காக உண்மையான தகவல்களை பிரதிவாதிகள் எனக்கு தெரிவிக்கவில்லை என்றால் எனக்கு அது குறித்து தெரியாது.

மறுவிசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/கா.பூர்ண ஜெய ஆனந்த்

முதன்மை மாவட்ட நீதிபதி

தஞ்சாவூர்